JAFFNA COLLEGE LIBRARY
SEP 7 1945
VADDUKODDAI, CEYLON.

**Rates**

*Subscription*: Rs. 6 per year. (including postage)
Single copy: 15 cts. (including postage)
*Advertisement*: On application.
*'In Memoriam'*: (within 4 inches) Rs. 5 per insertion.
*'Order Nisi'*: Rs. 3 per insertion.

# THE MORNING STAR

Registered as a Newspaper | (Established 1841) | Published every Friday

VOL. 105 | JAFFNA, FRIDAY, AUGUST 17, 1945. | NO. 32.

**Notice**

Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## CALENDAR OF EVENTS

| | |
|---|---|
| August 17 | : J. C. S. I. U. C. Semi-Annual Meeting at Navaly |
| " 19 | : Thanksgiving Service in all Churches. |
| " 19—20 | : Boys' Camp at the Ashram. |
| " 20 | : Formal opening of the United Christian Training College, Nallur, at 5 p. m. |
| " 21 | : The Ashram Dedication Anniversary. |

## NEWS

### LOCAL

### Boys' Camp at the Ashram

A Boys' Camp is to be held at the Ashram on the 19th and 20th of August. Dr. Paton will conduct the camp assisted by Mr. J. J. Ratnarajah and Mr. I. T. Yesusahayam.

### Dr. Paton at the Colombo Y. M. C. A.

Those interested in Ashram work were met by Dr. Forrester Paton on the 9th at a quiet evening at the Central Y. M. C. A. Clad in Khaddar cloth and banian, Dr. Paton an Englishman who leads a simple life in his Ashram in India, explained to those present the ideal of Ashram life and the community living they practised in the Ashrams.

*The Daily News.*

### Free Education from October

It is understood that the Board of Ministers have sanctioned the introduction of Free Education in schools from the Kindergarten to the University. All Assisted Schools which have not yet decided to join the scheme have been given a period of three years to decide. In the meantime the grant will be paid to such schools as has been done hitherto. The whole scheme, will, it is learnt, cost the Government Rs. 48 million a year.

### Ordination Service

Last Sunday, the Rev. Ronald A. Jefferies, the Rev. G. Denzil de Silva B. D. and the Rev. S. L. B. Fernando B. D., were ordained as Ministers of the Methodist Church in Ceylon, at the Methodist Church in Dam Street Colombo. The Chairman of the Ceylon Provincial Synod (Rev. S. Geo. Mendis) conducted the service, assisted by the North Ceylon District Chairman, the Rev, James S. Mather, and the South Ceylon Chairman, the Rev. G. A. F. Senaratne. The ordination charge was delivered by the Rev. H. R. Cornish, last year's Chairman of the Provincial Synod.

### Founders' Day at Uduvil

The Founders' Day Celebrations at Uduvil came off on Wednesday the 15th commencing at 5 30 p, m. Mr. J. C. Amarasingham, Principal of the United Christian Training School, Nallur presided. Rev. Clifford Wilson, Vicar of St. Michaels and All Angels, and at one time Director of Education of the Canterbury Diocese and educational adviser to the late Archbishop Temple, was the chief speaker. A full account of his address will appear in our next issue. The Chairman in his remarks referred to the Founders of the school, chief among whom were Miss Eliza Agnew, Miss Susan R. Howland and Miss Lulu Bookwalter—the "Big Three" as the speaker styled them. He also said that it was a day when we should remember all those who had unostentatiously contributed to the building of the school, though their names had never come to the lime light. Miss A. B. Paramasamy, the Principal presented the Report and Mrs. Kanagathungam distributed the prizes. A variety entertainment followed which consisted chiefly of Eastern and Western dances which reached a very high standard and was much appreciated by all.

### Personal

A cable has been received to say that Rev. S. Kulendran has arrived in America.

### Obituary

The death took place on the 10th inst. at Tinnevely of Mr. V. Sittampalam, Advocate after a brief illness. The deceased was 34 years old and leaves behind his widow and three children to bemoan his loss. On Saturday the 11th inst. at the Mallakam Court when the Magistrate Mr. A. S. Ponnambalam came on the bench Mr. Hudson Tambirajah, the senior member of the Bar made a reference to the untimely death of Mr. Sittampalam alluding to the high character of the deceased, the success attained by him in the profession and the contribution made by him towards the political advancement of his country-men. Mr. Tambirajah requested the Magistrate to have the expression of sympathy by the members of the Bar conveyed to the family of the deceased and also to adjourn Court early. The Magistrate in reply associated himself with the sentiments expressed and complied with the requests made.

### Sir C. V. Raman on the Atomic Bomb

Sir C. V. Raman the well known Indian Physicist and Nobel Prize Winner, picturing the effect of the Atomic Bomb says "one cubic foot of Uranium Oxide might develop 1,000,000 kilowat hours in less than one hundredth of a second. The consequence of that terrific heat is developed resulting in a blinding flash brighter than the sun. Heavy pressure waves, popularly known as blasts are caused and everything in the way of this pressure wave over long distances are naturally destroyed while the targets close to the site of the explosion melt away in the terrific heat. Sir Raman visualise the bomb to be small in dimension, to be in a steel casing or container in which are stored the rarest isotypes of Uranium to which perhaps is added some other suitable material to make the reaction progressive.

---

### THE NALLUR UNITED CHRISTIAN TRAINING COLLEGE

Formal opening on Monday, 20-8-45

PROGRAMME

| | | |
|---|---|---|
| 5.00 | p. m. | —Service in the Church. |
| 5.45 | " | —Garden Party. |
| 6.30 | " | —Exhibition of extra curricular activities. |
| 7.15 | " | —Public Meeting followed by a short entertainment. |

The Principal, Staff and the students of the College would be happy to see their friends grace the occasion.

J. C. Amarasingham,
Principal.

14-8 45.
Nallur,
32—1.

### FOR SALE

A plot of land with plantations about 18 lachams at Uduvil opposite the Sub-Post Office in close proximity to the Uduvil Girls' English School.

For particulars apply to:

Mrs. T. Strong,
Uduvil, Chunnakam.

31—2

---

### Jaffna College—Alumni Celebrations and Prizegiving.

Will Old Boys and Friends please keep the 14th and 15th of September free for the above celebrations. A further announcement will follow with regard to the programme.

P. Nagalingam,
Secy. J. C. A. A.
K. A. Selliah,
Ag. Principal.

32—1

### Nallur Kandaswamy Temple Annual High Festival—1945.

The public is hereby notified that traffic will be diverted from the sections of the Point Pedro Road and Old Store Road adjoining the Nallur Kandaswamy Temple, along Wyman Road, Navanturai Road, and Nallur Cross Road No. 1, from 6 a. m. to 8 p. m. daily from 22nd August 1945 to 7th September 1945, on account of the annual festival at the Nallur Kandaswamy Temple.

Sgd. P. R. de S. SENEVIRATNE,
for Superintendent of Police,
Northern Province.

Police Office,
Jaffna, 1st August, 1945.

### Govt. Tenders

STEEL HOOP IRON AND JUTE

Tenders are invited for the purchase of the undermentioned articles available at the Saltern, Puttalam:

| | |
|---|---|
| Steel Hoop Iron | 21 cwts. 1 qr. |
| Jute cloth | 750 yds. |

Particulars can be had from the Salt Superintendent, Puttalam. Tenders should be addressed to the Acting Salt Commissioner, P. O. Box 539, Colombo, and should reach this office at or before 12 noon on 21st August, 1945.

T. B. Tisseverasinghe,
Acting Salt Commissioner.

Colombo,
3rd Aug. 1945. CV

LADIES!

LEATHER HAND BAGS
DRESSING COMBS
ORGANDY 'KONDAI MALAIS'
INVISIBLE HAIR NETS
AND
*WIDE RANGE OF GLASS - BANGLES—Cts. 12 to Cts. 20.*

NEWTONS,
MAIN STREET, JAFFNA.

THE SHOP FOR THE BEST BOOKS

General and Regional Geography by *Unstead and Taylor.*
Geography of Ceylon by *E. K. Cook.*
Introduction to Tropical Botany by *M. J. LeGoc.*
Light and Sound by *Stewart.*
Heat, Light, Sound and Magnetism and Electricity by *Mackenzie.*
A Class Book of Physical Chemistry by *Lawry and Sagden.*
Introduction to Organic Chemistry by *E. J. Holmyard.*
Higher Algebra by *Hall and Knight.*
Pitman's Shorthand New Era Edition.

THE C. L. S. BOOK SHOP,
First Cross Street, Jaffna.

THE HOME BEAUTIFUL!

*COMPLETE HOUSE FURNISHING*
*FURNITURE DESIGNING*
*FRENCH - POLISHING & UPHOLSTERING*
undertaken

— NEWTONS —
FURNITURE DEPARTMENT,
*MAIN STREET,*
JAFFNA.

BOOKS OF SPECIAL INTEREST

"THE CASTES, CUSTOMS, MANNERS AND LITERATURE OF THE TAMILS" — BY SIMON CASIE CHETTY.
*Price Re. 1 - 00; (Postage Cts. 25).*
A work of great interest to students of this subject.

"OUR PLACE IN THE CIVILISATION OF THE ANCIENT WORLD" — BY K. BALASINGHAM.
*Price Cts. 75; (Postage extra).*
A lecture covering a wide field of historical inquiry.

GENERAL PUBLISHERS LTD.,
20, Parson's Road, Fort. P. O. Box 305, Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.

# புதினக் குறிப்புகள்

### காலநிலை

மழைக்காலம் இடைக்கிடை காணப்பட்டாலும் மழையைக் காணவில்லை. சில நாட்களின்முன் பெய்த சிறு மழை ஊருக்குட் பல நோய்களை யுண்டாக்கியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, இலங்கை முழுவதிலும் மழைத்தாழ்ச்சியினுற் பெரிய கஷ்டங்களேற்பட்டிருக்கின்றன. கொழும்பு, கண்டி முதலிய பெரிய நகரங்களில் வசிக்குஞ் சனங்கள் தண்ணீர்ப் பஞ்சத்தினுல் வருந்துகின்றனர்.

### வைசூரிநோய்

இலங்கையிற் பலவிடங்களில் இந்நோய் தோற்றியிருக்கின்றது. வைத்தியப்பகுதியார் இந்நோய் பரம்பாதபடி தம்மாலான பிரயத்தனங்களைச் செய்துவருகின்றனர். ஏறக்குறைய எல்லா இடங்களிலும் இந்தியாவிலிருந்தே இந்நோய் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

### ஐக்கியசங்க மகாநாடு

வடமாகாணத்திலும் கிழ்மாகாணத்திலுமுள்ள ஐக்கிய சங்கங்களின் வருடாந்த மகாநாடு இவ்வருடமும் யாழ்ப்பாணத்திலுள்ள நீகல் மண்டபத்தில் சென்ற 9ந் திகதி தொடக்கம் 3 நாட்களாக நடைபெற்றது. தலைவர் திரு V வீரசிங்கம் அவர்கள் அக்கிராசனம்வகித்துக் கூட்டங்களை நடத்தினுர். ஏறக்குறைய 800 சங்கங்களின் பிரதிநிதிகளும், ஐக்கியசங்கப் பகுதி உத்தியோகஸ்தரும் சமுகமளித்தனர். அரசாங்கசபை அங்கத்தவராகிய திரு. மகாதேவா தம் ஆரம்ப பிரசாரணத்தில், ஐக்கியசங்க முயற்சி தமிழருக்குள்ளேயே அதிகம் விருத்தியடைந்துவருகிறதென்றும், அதனுல் தமிழனுகிய தமக்கு அது பெருமையைக் கொடுக்கிறதென் றும்கூறினுர்.

### நிலாவரை

புத்தூருக்குச் சமீபத்திலுள்ள வற்றாக் கிணருகிய நிலாவரையின் தண்ணீரை நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகிப்பதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன இக்கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்வதற்காக 2000 அடி நீளமான வாய்க்காலொன்று வெட்டப்பட்டிருக்கிறது. தண்ணீர் இறைப்பதற்கு வேண்டிய குழாய்கள் வந்து சேர்ந்தவுடன் நீர்ப்பாய்ச்சல்வேலை நடக்கும். இம்முயற்சி நிறைவேறும்போது செம்பாட்டுமண்ணுள்ள 5000 ஏக்கர் நிலம் மிகச் செழிப்பான தோட்டமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நீர்ப்பாய்ச்சல் வேலையோடு சம்பந்தப்பட்டதாய்க் குடியேற்ற முயற்சியும் ஆலோசிக்கப்படுகின்றது. நிலாவரைக்குப் பக்கத்திற் கல்லுங் கரமுமாயிருக்கும் 1000 ஏக்கர் நிலத்திலுள்ள கல்லைக் கிளறி அதைத் தோட்ட நிலமாக்கியபின் காணி பூமியற்ற ஏழைகளை அங்கே குடியிருத்த யோசனை நடைபெறுகின்றது. இம்முயற்சிகள் நிலாவரையைச் சுற்றியிருக்கும் பகுதிகளுக்கு மிகுந்த நன்மை பயப்பனவாகும். வடமத்திய, வடமேல் மாகாணங்களில் நீர்ப்பாய்ச்சல் வேலைக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடும் அரசினர், பலவருடங்களாய்ப் பின்போடப்பட்டுவந்த நிலாவரை நீர்ப்பாய்ச்சற் திட்டத்துக்கு மதிப்பிடப்பட்ட ஆறுலட்சம் ரூபாவைச் செலவிடப் பின்னிடமாட்டாரென நம்புகிறோம்.

### யாழ்ப்பாணக் கடலேரி

யாழ்ப்பாணத்துக்கு மிகுந்த நன்மை பயக்கத்தக்க இன்னொரு வேலையைப்பற்றியும் யோசனை நடைபெறுகின்றது யாழ்ப்பாணக் கடலென அழைக்கப்படும் வாவிக்குட் சமுத்திரத்திலிருந்து உப்பு நீர் வராதபடி அணைகட்டி அதை நன்னீர் வாவியாக்கிவிட்டால் யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்கு, வடமராட்சி என்னும் பகுதிகளிலே யாதொரு பிரயோசனமுமின்றி உவர் நிலமாயிருக்கும் ஐம்பதினுயிரம் ஏக்கர் நிலம் செழிப்பான வயல்நிலமாகவும், புற்றரையாகவும் மாற்றப்படக்கூடுமென்று பல வருடங்களின்முன்னிருந்த ஒரு எஞ்சினியர் விளக்கப்படுத்தினுர். சட்டசபை அங்கத்தவராயிருந்த சுவாமி பாலசிங்கமும் பலதடவைகளில் இவ்விஷயத்தை அரசினருக்கு எடுத்துக்காட்டியும் யாதொரு முயற்சியும் நடைபெறவில்லை. இப்பொழுது இவ்விஷயம் யோசனைக்கு வந்திருக்கிறதென்றும் சீக்கிரம் வேலை தொடங்கப்படுமெனவும் கேள்விப்படுவது சந்தோஷமே.

### வைத்தியப்பகுதி

இலங்கைக் குடிசனத்தொகை இந்நாள் ஆங்கில வைத்தியர் தொகையையும், "டோக்ஷ்"மார் தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிரித்தானிய இராச்சியத்திலுள்ள மற்றப் பகுதிகளிலும்பார்க்க இங்கே வைத்திய சகாயம் மிகக் குறைவென்று அரசினருக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டிருப்பதினுல் இங்குள்ள வைத்தியர் தொகையையும் டோக்ஷ்மார் தொகையையும் கூட்டுவதற்கு எத்தனங்கள் நடைபெறுகின்றன. இலங்கையில் ஒவ்வொரு மாகாணத்திலும் சுதேச வைத்தியசாலைகளும் மருந்துச்சாலைகளும் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், சுதேச வைத்தியசாலைகளைத் தமபொறுப்பில் ஸ்தாபிப்பவர்களுக்கு அரசினர் உதவி நன்கொடை கொடுக்கவேண்டுமென்றும் சுதேச வைத்தியர் சங்கம் மந்திரி சபைக்கு மனுச்செய்திருக்கிறது. இவ்விஷயத்தை ஆராய்ந்து என்ன செய்யப்படவேண்டுமென அறிவிக்கும்படி திரு. அலுவிகாரை கேட்கப்பட்டிருக்கின்றனர். மேலும் சுதேச வைத்தியரால் கொடுக்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை (Medical Certificates) அரசினர் அங்கீகரிப்பதற்கு என்ன ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும் யோசனை நடைபெறுகின்றது.

### பொலிஸ்பகுதி

இலங்கைப் பொலீஸ் பட்டாளத்தில் 800 பேருடைய இடங்கள் காலியாயிருக்கின்றனவாம். சென்ற சில வருடங்களாக இராணுவப்பகுதியில் உயர்ந்த சம்பளம் பெற வசதியிருந்ததினுல் பலர் பொலீஸ் பகுதியைவிட்டு இராணுவப்பகுதியை நாடிச் சென்றுவிட்டனர். புதிதாகப் பொலீஸ் பகுதியைச் சேரவும் அனேகர் விரும்பவில்லை அதனுலே இவ்வளவு பெருந்தொகையான இடங்கள் காலியாயிருக்க நேர்ந்தது. இதைக்கண்ட அரசினர் 1943ம் ஆண்டு சித்திரைமாசம் 1ம் திகதி தொடக்கம் பொலிஸ்காரருக்கு அவர்களுடைய சம்பளத்தோடு 100க்கு 20 வீதம் விசேட நன்கொடை கொடுக்கத் தீர்மானித்தனர். அப்படிச் செய்தும் காலியான இடங்களை நிரப்ப முடியவில்லை. அதனுல் இப்பொழுது பொலிஸ் பட்டாளத்தவரின் சம்பளங்களை இன்னும் கூட்டிக் கொடுக்கவும் அதற்காக வருடம் 1,30,000 ரூபா செலவிடவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### யுத்தகால உபகாரவேதனம்

எதிராய் வரும் புரட்டாதி மாசம் முடியவுள்ள ஒரு வருடத்துக்கு யுத்தகால உபகாரவேதனமாக 2,14,80,000 ரூபா செலவிடும்படி அரசிறை வரவுசெலவுத் திட்டத்திற் குறிக்கப்பட்டிருந்தது. சீவியத்துக்குரிய செலவுகள் அதிகரித்து அவ்வேதன வீதம் கூட்டப்பட்டதினுல் அத்தொகை போதியதாய்க் காணப்படவில்லை. இப்பொழுது அதற்காக இன்னும் 65 இலட்சம் ரூபா மேலதிகமாய்ச் செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### பட்டுப்புடவைக் கட்டுப்பாடு

இனிமேல் பட்டுப் புடவைகள் கூப்பனின்றி விற்கப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அவைகளின் விலை கட்டுப்பாட்டுக்குட்பட்டே யிருக்குமாம்.

### புதிய கல்வித் திட்டம்

சென்ற சில மாசங்களாக இலங்கையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டங்களிற் பேசப்படாத கூட்டங்கள் மிக அருமை. சென்றவாரம் காலியில் நடைபெற்ற ஓர் பாடசாலைப் பரிசளிப்புக் கூட்டத்தில் அப்பாடசாலைத் தலைவர் வாசித்த அறிக்கையில்: இப்பாடசாலையின் சென்ற வருடச் செலவு 4 ,500 ரூபா. புதிய திட்டத்தின்படி அரசினர் இப்பாடசாலைக்குஉபாத்திமார் சம்பளமாக 32,000 ரூபாவும் பிற செலவுகளுக்காக ஏறக்குறைய 750 ரூபாவும் மாத்திரமே தரவசக்கூடும். இப்பொழுது 42,500ரூபாசெலவிட்டுச்செய்யும்வேலையை 32,750 ரூபாவோடு செய்ய எத்தனித்தால் வேலை எவ்வாறுகுமென்பதை எவரும் இலகுவாய் விளங்கிக்கொள்ளலாம் என்று கூறினுர்.

### மரணம்

கச்சாய்க் கோவிற்பற்றைச் சேர்ந்த செற்பேலியில் வசிப்பவராகிய கனம். குழந்தைவேலு இளையதம்பியின் ஏக புதல்வியும், வாழைச்சேனை அரசாட்சிப் பாடசாலைத் தலைமை ஆசிரியரான வே. யோசேப்பு அவர்கட்கும், வலவெட்டித்துறை கதலிக் பாடசாலைத் தலைமை ஆசிரியரான மனுவேற்பிள்ளை அவர்கட்கும் அன்பார்ந்த மருகியுமான ஏழு வயதுள்ள ஜெயநாயகி என்னும் செல்வச் சிறுமி, திடீரென ஏற்பட்ட [illegible] முற்ற தசை செயற்றையத் [illegible] ளோம்.

### புகைரதப்பகுதித் தலைவர்

இலங்கைப் புகைரதப்பகுதித் தலைவராயிருக்கும் திரு ஹில்ஸ் இளைப்பாறும் நோக்கத்தோடு புரட்டாதிமாச இறுதியில் லீவுபெற்றுச்செல்லவிருப்பதனுல் அப்பதவிக்கேற்ற ஒருவரைத் தெரிவுசெய்து தரும்படி இலங்கை யரசினர் இராசமாலிகிரரைக் கேட்டிருக்கின்றனர்.

### யுத்தமுடிவுக் கொண்டாட்டம்

மகாபெரிய உலக யுத்தத்தின் முடிவை எப்படிக் கொண்டாட வேண்டுமென்று சகல தேசங்களிலும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. யுத்தமுடிவுநாள் V. J. நாள் எனச் சொல்லப்படும். இலங்கை யரசினர் இக்கொண்டாட்டத்தைப்பற்றிச் செய்திருக்கும் தீர்மானங்களாவன:

யுத்தமுடிவுபெற்றதென்றுஉத்தியோக முறையான செய்தி இலங்கைக்கு வந்தவுடன் ஆகாயவானிமூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் அச்செய்தி எங்கும் அறிவிக்கப்படும். தேவாலயங்களில் மணியடிப்பதில் அல்லது சந்தோஷ கொண்டாட்டத்துக்குரிய வேறு வகையினுல் அச்செய்தி சகலருக்கும் அறிவிக்கப்படும். யுத்தமுடிவுச் செய்தி கிடைத்த நாளும் அடுத்த இரண்டு நாட்களும் பகிரங்க விடுதலை நாட்களாயிருக்கும். V. J. நாளிலும் அடுத்த இரண்டு நாட்களிலும் ஒரு குறித்த நேரத்தில், வசதியானுல் பிற்பகல் 6 மணிக்கும் 8 மணிக்கும் ஆலயங்களில் ஆராதனை நடைபெறும். 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன் யுத்த முடிவுச் செய்தி கிடைத்தால், எல்லாச் சமயத்தவர்களும் 19ம் திகதி காலை 10½ மணிக்கு ஸ்தோத்திர ஆராதனை நடத்தக் கேட்கப்படுகின்றனர். V. J நாளிலும் அடுத்த 2 நாட்களிலும் இராசாங்க கட்டிடங்களும் மற்றக் கட்டிடங்களும் பச்சிலைகளாலும் தோரணங்களாலு மலங்கரிக்கப்பட்டுத் தீப மேற்றப்படுதல் மிகவும் நல்லது.

### யப்பானிய சக்கரவர்த்தி

யாப்பானிய சக்கரவர்த்திகள் ஒவ்வொருவரும் மிக்காடோ என அழைக்கப்படுவர். அவரை யாப்பானியர் ஓர் தெய்வமாக மதிக்கின்றனர். இப்பொழுது அரசு செலுத்தும் மிக்காடோவின் பெயர் ஹிரோஹிறரோ. இவர் யாப்பானின் 128ம சக்கரவர்த்தியாவர். இவர் மிகச் சிறிய உருவமும் 44 வயசுமுள்ளவர். அவர் எந்த உடையையும் இரு முறைக்குமேல் அணிவதில்லை. அவர் அணிந்த உடைகள் அரண்மனை உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கப்படும். அவர்கள் அதைத் தம் குடும்பத்தின் அரிய பொக்கிஷமாகப் பாதுகாப்பர். அவர் புகைரதத்திற் போகும்போது அப்புகைவண்டி யன்னல் திரையால் மறைக்கப்பட்டிருக்கும். வீதிவழியாய்ச் சவாரி செய்யும்போது மேல்வீடுகளிலிருந்து ஒருவரும் அவரைப் பார்க்கப்படாது. ஆதலால் பிரசைகள் ஒருபொழுதும் அவரைக் காணுவதில்லை. அவர் தம் பிரசைகளோடு எவ்வகையாயாவது பேசுவதில்லை.

யாப்பானிய சக்கரவர்த்திகள் வழக்கமாய் மேற்காட்டிய முறைகளையனுசரித்து வந்தாலும் இப்பொழுதிருக்கும் சக்கரவர்த்தி முற்போக்குடையவர். இவர் 21 வயதாயிருந்தபோது, தமக்கு முன் 2500 வருஷகாலமாய் முடிக்குரிய இளவரசர்கள் அனுசரித்த முறைக்கு மாருய், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரித்தானிய இராச்சியம், ஐரோப்பாக்கண்டம் முதலிய பகுதிகளிற் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். சுற்றுப் பிரயாணத்திலிருந்து திரும்பி வந்து யாப்பானிய சக்கரவர்த்தினிகளாய் வருவோர் தெரிவு செய்யப்படும் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் பெண்ணை விவாகஞ் செய்யாமல், யாப்பானிய பாரம்பரியத்துக்கு மாருய், வேறு குடும்பத்திலிருந்து தாம் காதல் கொண்ட ஓர் பெண்ணை விவாகஞ் செய்தார். இவருக்குப் பிள்ளைகளுண்டு. முடிக்குரிய இளவரசன் அரண்மனையில் வசிப்பது யப்பானிய வழக்கத்துக்கு மாருனதால் 11 வயதுள்ள மூத்தகுமாரனுகிய துகு என்பவர் அரண்மனையை விட்டுப் போய்விட மற்ற 5 பிள்ளைகளும் அரண்மனையிலேயே வசிக்கின்றனர் சுருட்டுக்குடித்தல் மதுவருந்தலாகிய தீய பழக்கங்கள் இவரில் இல்லை. ஓர் உத்தம கணவனுகவும் நல்ல பிதாவாகவும் சீவித்து வருகிறார்.

## ஆங்கில கீத மொழிபெயர்ப்பு.

(English Hymns Translated)

"Dear Lord and Father of Mankind"

தேவாரம் – பண் – திருநேரிசை

1

மன்னுயிர்க்கெல்லாம் நேய
மகிபனும் எங்கள் தந்தாய்!
மன்னியெம் பதைப்பு மிகும்
மலைப்புறு போக்கையெல்லாம்
நன்னை– பக்தியோடு
நயந்துநின் சேவைசெய்துன்
பொன்னடி போற்றச் சொஸ்த
புத்தியை அருளு மையா.

2

ஊற்று உன் குளிர்ந்த நீரை
உள்ளமே அமைந்து ஆற
ஆற்றுமெம் அகத்தை முரருய்
ஆத்திரம் அலைசசல்தீர;
மாற்றி எம் சீவியத்தை
மதி முறை யோடு வாழ்தல்
சாற்றுமே நீ அளிக்கும்
சாந்தியாம பேரழகை.

3

ஆசையாம் வெப்பம் தீர
ஆற்று தண் தயிலமூட்டி;
பாசமார் புலனடங்கி
பாவியெம் மெய்மறக்க,
ஈசனே அமைதலனே
இன்சிறு ஓசையோடு
பேசிடு பூகம்பம், தீ,
பெரும் புயலதிர்ச்சிக்கூடாய்.


## நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் 1945

நல்லூர்க்கந்தசுவாமிகோயில் வருடாந்த திருவிழாக்கள் காரணமாக 1945ம் ஆண்டு ஆவணிமாதம்22ந்திகதிதொடக்கம்புரட்டாதிமாதம் 7ந்திக முடிய தினமும் காலை 6மணி தொடக்கம் மாலை 8 மணி வரையும் கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம பருத்தித்துறைத் தெருப்பக்கம் பழையசந்தைத் தெருப்பக்கம் என்னுமிவை மார்க்கமாகப் போகும் எவ்வகை வண்டிகளும் அப்பாதைகளைஒழித்து,உவைமன்தெரு,நாவாந்துறைத்தெரு, நல்லூர் 1ம் நம்பர்க் குறுக்குத் தெரு என்னுமிவைகள் மூலமாகவே போக்குவரவு செய்ய வேண்டுமென்று இதனுல் எவர்க்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

P. R. de. S. செனிவரத்தின,
வடமாகாண பொலிஸ் தலைவருக்காக.

பொலிஸ்தானம், யாழ்ப்பாணம்.
1 – 8 – 45. 31—2.


70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் ...



1872ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் சிறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும் இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து கட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனுல் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

ஹம்பர்

மில்லர்ஸ் லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரஏஜண்டுகள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கணுந் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேபருள்
பேசநாமமே என்றென்று மோங்கவே

உதயதாரகை

1945ம் வருடம் ஆகஸ்டு மீ 17 உ

## யுத்த முடிவு

சென்ற சில வருடங்களாய் நடந்துகொண்டுவந்த இந்த இரண்டாவது உலக யுத்தம் யப்பானியர் ஐக்கியகட்சியாருடைய நிபந்தனையை ஏற்றுச் சரணாகதியடையத் தீர்த்துக் கொண்டதினாலே முடிவுக்கு வந்திருக்கின்றது. செய்து முடிக்க வேண்டிய சில வெளியாசாரங்கள் முடிவுக்கு வந்துவிட்டன வொழும்பிலே யுத்தம் முடிந்துவிட்டதெனச் சந்தோஷ ஆர்ப்பரிப்புக ளிருக்கன. இதைவிடக் கூடிய ஆர்ப்பரிப்பான கொண்டாட்டங்கள் லண்டனிலும், சங்கிங்கிலும் நடைபெறுகின்றன. யப்பானியர் கேட்ட கேள்விகளை நான்கு வல்லரசுகளும் ஆலோசிக்கின்றன. மிக்காடோவை இன்னும் சக்கரவர்த்தியாக ஒப்புக்கொள்ள வேண்டுமென அவர்கள் கேட்ட கேள்வி தீர்க்கப்படக்கூடாத வொன்றல்ல. இது விஷயமாய் சங்கிங்கிலும், மொஸ்கோவிலும், உவாஷிங்டனிலும், லண்டனிலும் இருக்கின்ற வேறு வகைப்பட்ட எண்ணம் யுத்தம் முடிவுக்கு வராதபடி தடுக்குமென எண்ண வேண்டியதில்லை. யப்பான் சரணாகதி யடைகிற விஷயத்தைத் திருப்பி யோசிக்கில், அது ஒரு நிபந்தனையு மின்றிய சரணாகதி யடைவது தான். ஆனபடியால் யப்பான் தனது சக்கரவர்த்தியுடைய தத்துவங்களிருந்தபடியே யிருக்க வேண்டுமென்ற கேள்வியைப் பிடித்துக் கொண்டு நிற்குமென எண்ண இடமில்லை.

யப்பானிய அரசாங்க மொன்று நிலைபெற வேண்டுமென்பது பொஸ்டாம ஆலோசனைக் கூட்டத்தின் எண்ணமாகும். ஆனால் ஜனநாயகத்தை யுண்டாக்கி, அதைப் பலப்படுத்த தற்குரிய தடையெல்லாம் நீக்கப்பட வேண்டும். இப்போதிருக்கும் யப்பானிய சக்கரவர்த்தி மேலைத்தேய செல்வாக்குகளுக்கு இசைந்துபோகும் போக்குடையவர். அரசாங்க சம்பந்தமாக விருக்கின்ற பழைய எண்ணங்கள் யாவையும் விட்டு, கருத்தமானதும், முன்னேற்றமான துமான விஷயங்களை யநுசரிக்கக்கூடியவர். பிடிவாதமும் வைராக்கியமு முள்ளவராய், "சுவர்க்கபுத்திரன்" என அறியப்படுவதிலும், நியாயமான அரசனாய் நடந்துகொண்டு போக விரும்பக்கூடும். சகலவித அரசாங்கம் ஹிரோஹிட்டோச சக்கரவர்த்தியை ஓர் யுத்தக் குற்றவாளியாக நினைக்கக்கூடும். யப்பானிய அரசாங்கம் தானநினைத்தபடி செய்ய நினைக்குந் தன்மைக்கு மொஸ்கோ மறுப்பாயிருக்கும்.

ஆனால் பிரித்தானியாவிலும் ஐக்கிய மாகாணங்களிலும் இருக்கு மெண்ண மெனவெனில்: யப்பானிய சக்கரவர்த்தி யுத்தத்தை ஆரம்பித்த தலைவர்களின் கையிற் பாவை மாத்திரமென்றும் அப்படி அவரிருக்கிருந்தாலும் சமாதானத்துக்குரியவோர் அரசாங்கத்தை யுண்டாக்குகிற விஷயத்தில் ஐக்கிய கட்சியாருடைய நோக்கத்துக்கு இசைந்து போகக்கூடுமென பதே.

யப்பான் சரணாகதி யடையும்படி சொல்லப்படுகிற காரியம் ஜர்மனி சரணாகதியடைந்து மூன்று மாசத்தின்பின் வருகின்றது. வரவேண்டிய முடிவை நோக்கிச் சம்பவங்கள் நிகழ்ச்சியுற்றுப் போகும் கெதி கடைசி நாட்களில் வாயுகதி யின் கெதியாக விருக்கின்றது. இதற்கு இரு காரணங்களுண்டு.

1. அழிவைக் கொண்டுவரக்கூடிய அணுப்பிரளயக் குண்டு.
2. ருஷியா யுத்தத்துக்குட் சென்றது.

இந்தக் கிழமையோடு யுத்தம் முடிவுக்குவருமேல், இரண்டாம் உலக யுத்தத்துக்குச் சென்ற காலம் 5 வருடமும், 11 மாசமும், 9 நாட்களுமாகும். இந்த யுத்த நிகழ்ச்சியினால் சர்வலோகமும் கஷ்டப்பட்டுவிட்டது. இலங்கை யுத்தத்தின் கஷ்டங்களை அநுபவித்து, அதனால் விளைந்த நன்மைகளையும் அநுபவித்தது. இந்தத் தேசத்தின் சனங்கள் யுத்தத்தின் அநேக நிஷ்டூரங்களை அநுபவிக்கவில்லை; இரண்டு விமானத்தாக்குதலைத் தவிர வேறு யுத்த கஷ்டங்கள் நடைபெறவில்லை.

சரித்திரத்தில் முன்னொருபோதும் நடந்திராத அழிவைக் கொண்டுவந்த யுத்த மிது. ஆனால் இந்த யுத்தத்தின் பின்வருஞ் சமாதானம் ஐரோப்பாவைப் பயங்கரத்தினின்றும் வறுமையினின்றும் எல்லா வகுப்பினரையும் விடுவித்துக்கொள்ளுமாயின், இந்த யுத்தத்தினின்றும் நன்மை வந்ததென்று சொல்லலாம்.

## அதி பயங்கர யுத்த ஆயுதம்

நமது இந்த தேசத்திலே நடந்ததாகச் சொல்லப்படுகின்ற பாரத யுத்தம் போன்ற மகா யுத்தங்களிலே சத்துருவை வெல்லப் பிரயோகிக்கப்பட்ட பல மகா பயங்கர அஸ்திரங்களுண்டு. அப்பாணங்கள் நினைத்ததை முடிக்குந் தன்மையுடையன. இந்து தேசத்திலே தோன்றியிராத ஒன்று மற்றைய தேயங்களிலே தோன்றினதெனச் சொலல முடியாதபடி அநேக நூதன விஷயங்களின் தொடக்கம் நமது பாரத நாட்டிலே தோற்றப்பட்டனவென்றால் மிகையாகாது.

தற்காலத்திலே அதிக பயங்கர யுத்த ஆயுதமாய்த் தோன்றியிருக்கும் அணுப்பிரளய குண்டு (Atomic Bomb) உலகமுழுவதையும் பிரமிப்புக்குட்படுத்தி, செயலற்றுதிற்கச் செய்யுமொன்றாகக் காணப்படுகின்றது. சென்ற 8ம் திகதி வெளிப்பட்ட இந்தக் குண்டு உலகத்திலே தோன்றியவற்றுள் முதலந்தரமான அழிவுகுண்டாகக் காணப்படுகின்றது. சாஸ்திர விற்பன்னர்கள் மனுஷவர்க்கத்தின கைகளிலே வைக்கப்படும் இந்தச் சக்தியின் வின் திரணம் எவ்வளவென்றும், என்னென்ன நூதன காரியங்களை இது செய்து முடிக்கப்போகின்றதென்றும், இது காரியங்களைக் குறித்துச் சாஸ்திர ஆராய்ச்சி வல்லுநர் நுணுக்க ஆராய்வுக் காரம்பித்துவிட்டனர்.

இந்தக் குண்டின் நன்மையான பக்கத்தைப் பார்க்கில் சாஸ்திரிகள் நினைக்கின்றபடி, தற்போது பிரயோகிக்கப்படும் விறகு, மின்சாரமுதலியவற்றிற்கு அதிக வல்லமையுள்ள பதிற்பொருளாகவும், சந்திர மண்டலத்தைக் கிட்டிச்சேர உதவக்கூடியதாகவும், வேறும் அநேக விஷயங்களுக்குதவியாகவு மிருக்கக்கூடுமென எண்ணப்படுகின்றது.

பாப்பாண்டவரின் ஆதீனமாகிய வாற்றிகனிலே இக்குண்டைப்பற்றிய புதினம் அதிக மனத்தாக்கலை யுண்டாக்கியிருக்கின்றது.

யுத்தகாரியங்களைப்பற்றிய புதிய எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற திரு. ஹான்சன் போல்டுவின் (Hanson Baldwin) அணுப்பிரளயக் குண்டின் தீமைப் பெறுபேற்றை அமெரிக்கர் அநுபவிக்கவேண்டி வருமோவென யோசிக்கின்றார். இக் குண்டின் வீச்சு அதி பயங்கர தீமையை வருவிக்கின்றதனாலும், அதிக அழிவையுண்டு[illegible] அதிகாரிகளாவெனவும் [illegible] பொருளோடு சம்பந்தப்பட்ட பேர் கின்றதெனவும், விபரிக்க முடியாத பெறுபேற்றை உண்டாக்குகின்றதினால் வெற்றியை இது சீக்கிரமாய்க் கொண்டுவரக்கூடியதெனவும், இதினால் முன்னிருந்ததைவிட அதிக பயங்கர பகையையும் வன்மத்தையும் உண்டாக்குமெனவும் அவரே குறிப்பிடுகின்றார்.

மனுஷருக்குள்ளே சகோதரத்துவத்தையுடையதாகியவோர் புதிய சந்தோஷமான உலகத்தை யுண்டாக்கக்கூடும். அல்லது அதல விதல பாதாள உலகத்துக்கு நம்மைக் கொண்டு போனாலும் போகுமென்பதும் அவரது கருத்து.

"அணுப்பிரளயக் குண்டு வெடித்து எல்லாவற்றையும் அழித்தபின் மனுஷன் மறுபடியும் சிகியத்தைத் தொடங்கி, மறுபடியும் நெருப்பையுண்டாக்கவேண்டுமெனப்" பிராஞ்சிய சாஸ்திரியார் ஜீன்பேயின்லே அபிப்பிராயப்படுகின்றார்.

"ஐக்கியசட்சியாரைப் போன்றவோர் சர்வசாதிக் கட்டுப்பாட்டுச் சங்கத்தாரால் உலகமெங்குமுள்ள யூரேனியம் (Uranium) என்னும் லோகத்தைக் கைபற்றி, கட்டுப்பாடு செய்யவேண்டு"மென்பது H. A. உவில்சன் பேராசிரியர் கருத்து.

## சுகாதாரக் குறிப்புகள்

நாம் உட்கொள்ளும் உணவின் சாரம் விந்து. அதனை ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டும். அது குறையும்போது பல நோய்கள் தோன்றும். அதன் பயனாக மரணம் ஏற்படுகிறது.

உணவு ரசத்திலிருந்து இரத்தம் உண்டாகிறது. இரத்தத்திலிருந்து மாமிசம் தோன்றுகிறது. மாமிசத்திலிருந்து தசை தோன்றுகிறது. அதிலிருந்து விந்து தோன்றுகிறது.

சரீர இயந்திரத்தின் தலைமைப் பொருளான சுக்கிலத்தை எல்லோரும் பாதுகாக்கவேண்டும். அதற்காக நமது முன்னோர்கள் பல விதிகளையும் ஆசாரங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். "விந்து விட்டான் நொந்து கெட்டான்" என்பது பழமொழி.

அரிசியில அளவுக்குமேல் தண்ணீரை வைத்துக் கொதிக்கவைத்து வடித்துவிடுவது சரியல்ல. இதனால் அரிசியின சத்தெல்லாம் கஞ்சியோடு போய்விடுகிறது. மக்கட்குக் கிடைப்பது சக்கையான சோறுதான். காய்கறி முதலான பதார்த்தங்களை வேகவைப்பதற்கு அதிகப்படியான தண்ணீரை வைத்துப் பிறகு தண்ணீரை வடித்துக் கொட்டிவிடுவதும்சரியல்ல. இதனால காய்கறிகளின் சத்தெல்லாம் போய்விடுகிறது.

சமையல் செய்யப் பழகுவதில் பதார்த்தங்களைச் சத்துடன்சமைக்கப் பழகிக்கொள்ளவேண்டும். சத்துள்ள ஆகாரத்தால் தேகசௌக்கியம் ஏற்படுவதுடன் அதிகப்படியான தீனி தின்பதும் குறையும்.

தினா உடல் உழைப்புச் செய்கிறவர்கள் இரண்டுவாரம் சுமமா ஊர் சுற்றுவதிலும், காட்சிகளை அனுபவிப்பதிலும் இன்னும் இதுபோன்ற விஷயங்களால் காலங்கழிப்பதிலும் நேரத்தைச் செலவிட வேண்டும்.

மனித தேகத்திற்குப் புஷ்டி தரும் உணவு பழங்களைத் தவிர வேறெதுவும இல்லை. பழங்கள் புஷ்டி தருவது மட்டுமல்ல பலவிதமான நோய்களைக்கூடப் பழவகைகளை உண்பதால் நிவிர்த்தி செய்துவிடலாம்.

எலுமிச்சம் பழங்கள் காய்ந்து கெட்டியாக விருந்தால், மைபொறுக்கும் சூடுள்ள வெந்நீரில் அவைகளை இரண்டு மணி நேரம் ஊறப்போட்டு வைக்க வேண்டும். சூடு தணிந்து குளிர்ந்தபின் அவைகளை யெடுத்து உபயோகித்தால் பழங்கள் மிருதுவாகவும் [illegible] நிறைந்து மிருக்கும். [illegible] காலத்தில் உடலிலுள்ள சில உப்புகளும் விட்டமின்களும் வேகமாகக் கரைந்து விடுகின்றன. இதைச் சமாளிக்க உப்புகள் நிறைந்தும் விட்டமின் உள்ளதுமான உணவுகளை உட்கொள்ளவேண்டும். உணவில் காய்கறி கனிகள் நிறைய இருந்தால் இது சரியாகிவிடும்.

கோடைக் காலத்தில் இரண்டு வேளைச் சாப்பாடு வைத்துக்கொள்ளுவதுதான் நல்லது. காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாகக் குளிர்ந்த வேளையிற் சாப்பிடவேண்டும். இவை இரண்டும் கனமான சாப்பாடாக இருக்கலாம்.

இயற்கை வைத்திய முறையை மக்கள் பின்பற்றி உடலைப் பாதுகாப்பார்களானால் வைத்தியர்கட்கு இந்த உலகில் வேலை ஒன்றுமிராது. வைத்தியர்கள் பிழைப்பிற்காக மக்கள் நோயை விலைகொடுத்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். வளரும் குழந்தைகளுக்குத் தினசரி நிறையப் பசுப்பால் கொடுக்கவேண்டியது அவசியம்.

முதலில் கூன் விழாமல் ஒவ்வொருவரும் இளம்பிராயத்திலேயே கவனித்துக் கொள்ளவேண்டும். பாலிய பருவத்திலேயே கூனலைக் கவனித்து நிமிர்த்திக்கொள்ளாவிட்டால் பிறகு நிமிர்த்துவது கடினமாகும்.

தலைமயிரைச் சுருட்டை யாக்குவதற்காக அதை இழுத்துப் பிடிக்கும் கொண்டையூசிகளை அணிந்து கொள்ளுவது மயிருக்கு வேண்டிய ரத்தம் போகாதபடி செய்துவிடும்.

அடிக்கடி சாப்பிடுவதே அபாயமாகும்.

அசீரணத்தை உண்டாக்கும் கனத்த உணவு சாப்பிட்டால், வேலை செய்ய இஷ்டமில்லாமல் சோம்பல் ஏற்பட்டுவிடும்.

எழுந்தவுடன் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் சுத்தசலம் குடிக்கவும்; அந்தத் தண்ணீர் குடலிற் பாய்ந்து அதைச் சுத்தம் செய்யும்.

அப்பம், கேக்குகள், பொரியல், அதிக ருசியுள்ள உணவுகள், தேயிலை, காப்பி, முதலியன நரம்புத் தளர்ச்சியை வளர்த்துவிடும். இவை கொடுக்கும் துடிப்பு தற்கால சாந்தியாகவிருந்து நாளடைவில் பெரும் சோர்வைக் கொண்டுவந்துவிடும்.

தற்கால சனங்கள் நவ நாகரிகப் போட்டி வாழ்க்கையில், கவலை ஆத்திரம், துக்கம் முதலிய உணர்ச்சிகளை ஏராளமாக வைத்துக்கொண்டு இவைகளால் நாளடைவில் வியாதியஸ்தராகிறார்கள்.

ஒவ்வொருவரும் சாதாரணமாகப் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு அரைமணி முன்பாக எழுந்து தேகப்பயிற்சி செய்யவேண்டும். அவ்வாறு செய்துவரும் தேகப்பயிற்சியால உடல் வலிமை ஆறு மாதத்தில் நன்றாக அதிகரிக்கும். உடலில் வலிமை இருந்தால் வியாதிகள் வரமாட்டா. (ஒற்றுமை)

---

நல்லூர் ஐக்கிய கிறிஸ்த ஆசிரியகலாசாலை

## திறப்புவிழா

1945ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 20ம் திகதி திங்கட் கிழமை

நிகழ்ச்சிகள்

மாலை
5 – 00 — ஆலயத்தில் ஆராதனை
5 – 45 — தேநீர்
6 – 30 — பாடத்திட்டத்திலில்லாத பள்ளிக்கூட நிகழ்ச்சிகள்
7 – 15 — பகிரங்க கூட்டமும் உபசாரணையும்

பள்ளிக்கூடத் தலைவரும், ஆசிரியர்களும், மாணவரும், தங்கள் சிநேகிதரின் வரவை அன்புடன் எதிர்பார்க்கின்றனர்.

14-8-45 நல்லூர். J. C. அமரசிங்கம், தலைவர்.

32 — 1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, August 17, 1945.

## THE END OF JAPAN

The long awaited V J Day has dawned. The few days of suspense in which the whole world was held just prior to the surrender announcement of the surrender of Japan, makes the day more welcome than it would otherwise have been. There is also little doubt that no day has been celebrated with such universal gusto as the V J Day which has brought to a close a war which has not merely been the bloodliest and most widespread war in human history but one that has been unique in history in more ways than one. Few nations of the world have succeeded in remaining neutral in this war and none have been unaffected while there has been no corner of the earth where its reverberations have not been felt. We do not think, therefore, that there is any part of the world which does not feel a sense of relief at the end of the Second World War which has lasted five years, eleven months and four days.

As we look back upon this dark period of "blood and toil, tears and sweat," we in Ceylon should be profoundly thankful that despite some little discomforts and rigours we have had, which are but normal during war time, we have enjoyed an immunity which was denied to many nations of the world. All that we have directly experienced of enemy action has been just two air raids. But though we had little experience of actual warfare, the period of the War has been, perhaps, the most momentous in the history of our island. Political and educational unrest reached their peak during this period and while the war clouds have been dispelled from the horizon, there still remain ominous clouds in the political and educational horizon which we hope will soon be cleared so that Ceylon may once more enjoy a period of uninterrupted Peace in all spheres of activity.

Much as we may admire the superb heights to which human heroism has risen amidst the horrors of war and the selfless spirit of sacrifice that has been revealed in millions of men and women, there is a darker side of the War which compels us to strike a pessimistic note even in the midst of V J Day celebrations. It is no secret that there have been events in the War which have marked the lowest point of degradation to which humanity has yet descended. The final stages of the war have seen the introduction of new and hideous refinements in the technique of war which are glaring indications of the diabolical use to which the fruit of man's inventive genius has been put. These new black depths to which men can sink are a grim reminder that evil is still a powerful force in human life. Pleasing philosophies of men getting better and better are challenged by them and the truth to be faced is that there are mighty opposites in the human heart for good or evil and that the good needs unflagging and fostering care if it is to live and flourish. As we come to the end of a long conflict, let us remember that the possibility of its recurrence can never be entirely dismissed unless we actively pursue the good on a world scale as well as in our individual lives. Man has won many victories. He has triumphed over many fell diseases. He has won a large measure of control over elemental nature. He has invented machines which annihilate distance and bring the world's peoples together. But he has yet to subordinate all his triumphs to good ends. He has yet to conquer and subdue his own tendencies to evil. Is it too much to hope that this new dark age will be followed by a new age of faith and hope?

## Resolutions adopted by the Education Conference convened by the N. C. C. held at the Colombo Y. M. C. A. on August 7th.

We welcome the fact that the State in Ceylon is increasingly determined to see to it that education is provided for all its citizens. We, as representing the Christian community, will gladly co-operate with the State in this.

### 1. *New Schools*:

The State Council has recommended that it shall be the duty hereafter of the State exclusively to establish schools of all types where necessary. We believe that this is unwise. Only a denominational school, as the Special Committee's Report points out, can give a 'complete' education, i. e. education against the background of religion. Giving religious instruction in state schools is no substitute for religious education which is more than a matter of mere instruction. Thus we believe that in the new education bill that is envisaged provision should be made for new denominational schools according to Recommendation 1 as placed before the State Council by the Executive Committee of Education. But, if it be thought that the right of denominations to start new aided schools will be at present a serious difficulty, financial and otherwise, in implementing the new proposals for a national scheme of education we, as a conference, are willing to support the exclusive right of the State to start new schools. We however feel that in view of the principle enunciated above a reconsideration of this position may be necessary in the future. It must be made clear however that private bodies can open unaided schools in the future. Recommendation 4 must be made more explicit.

### 2. *Old Schools*:

But whatever be the arrangement for the future, the future cannot be made safe for education unless present schools are allowed to continue as efficiently as possible. We are surprised, therefore, that the "30" rule which was originally intended to apply to new denominational schools should have been recommended by the State Council to apply to old schools, and that too in a more drastic form and penalising boarding schools especially. We urge that this whole matter be reconsidered and that this rule as applying to existing schools be dropped. Full reasons for this are set forth in a memorandum submitted to the Minister of Education by the Governing Body for educational institutions founded by the C. M. S. and C. E. Z. M. S. in Ceylon. This conference fully supports that memorandum.

### 3. *Efficiency*:

We are glad that the State Council amended Recommendation 5 as placed before it by the Executive Committee of Education, and recommended instead multilateral schools with bifurcation at 14 +. This will, we believe, make for larger efficiency. But in order to maintain this efficiency two other matters need careful consideration.

i. It seems to us that in order to cut down expenditure, the units of attendance on which the number of teachers are to be calculated has been increased. (Recommendation 18.) This will not only reduce efficiency in actual teaching, but it will also mean that each school will be so under staffed that the whole work of character training will be handicapped. Besides, a small staff will necessarily mean a restricted curriculum, and this at a time when the country needs that its youth receive a liberal education. Also, with the urgent necessity to adapt existing schools towards a multilateral education the number of teachers needed is bound to increase.

ii. It should be borne in mind when Recommendation 17 with respect to equipment grant is implemented, that that grant should be based upon the normal expenditure of assisted schools to maintain efficiency. In the alternative we support the recommendation in para 174 p 68 of the Special Committee's report.

### 4. *Nationalisation*:

We, as representing the Christian community, realize that while the right of denominations to share in the programme of the country's education should be effectively recognised, yet that denominations should guard against everything that would militate against the implementing of a comprehensive national scheme of education. We are aware that unfortunately denominational rivalries have marred educational work. In order, therefore, that we may give our fullest co-operation to the State in eliminating unnecessary rivalries and also in supporting the State in its educational programme, we recommend to the Churches whom we represent that, while retaining those of their schools which are integral to their total work, they hand over all their other schools to the State. We would however remind those in authority in the State that if the Churches are to do this, the continuance of the schools they wish to keep should be guaranteed. In other words, not only is it necessary for the State as far as possible to observe the "one mile rule" in opening new schools and to see that the "30" rule does not apply to existing schools, but it is also necessary as effectively as possible to guarantee the future against action such as was contemplated both by Mr. J. R. Jayawardene's amendment as well as that of Mr. S. W. R. D. Bandaranaike, in turning down both of which the State Council did truly reflect public opinion. One way of giving the guarantee we urge is to include in the preamble to the proposed education bill an unequivocal declaration that "the system of direct state control and the system of denominational control should be permitted to exist side by side." (Report p 27).

### 5. *Religious Instruction*:

With regard to Recommendation 3 passed by the State Council, this conference re-affirms the decision of the last education conference convened by the Christian Council held last year in which the following resolution was passed:— "This conference wishes especially to urge on the Churches that they see to it that in our schools the children of parents who do not wish them to receive Christian religious instruction are given religious instruction either in their own faith by members of that faith who are on the staff or others invited by the head of the institution, or according to such a syllabus as is outlined in Mr. Bradby's dissent (p 132) so that for these children too education may have a religious basis. The syllabus to be approved by the Department of Education. It is important also that the syllabus of Christian religious instruction in our schools should include instruction in the other faiths of the country."

We urge that when the education bill is framed, Recommendation 3 of the State Council include also a provision for the use of such a syllabus as is outlined by Mr. Bradby. (Mr. Bradby's suggested syllabus is an interfaith syllabus comprising: comparative history of religion, great religious books of the world, ethics and elimentary metaphysics.)

### 6. *Denominational Training Colleges*:

This conference requests the Government to allow the Protestant religious bodies in the country to continue to run two Training Schools one for the Sinhalese area and the other for the Tamil area, under conditions agreed upon between the Government and the Protestant bodies.

### 7. *An Education Bill*:

This conference notes that the resolutions passed by the State Council are only recommendations; and that the Minister of Education has promised the country a comprehensive Education Bill. We welcome this promise and look forward to its fulfilment, for were it sought to implement new proposals piecemeal through a series of amendments to the code, it would seriously hinder the continued progress of educational work. This conference resolves that when the education bill is before the State Council, a small deputation from the Christian Council seek permission to give evidence on the bill before the Committee of the House. The deputation will base its evidence on the pronouncements of the Christian Council Education Conference of the 13th January 1944, and the decisions taken by the conference today.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction No. 435.

In the matter of the Estate of the late Velupillai Arumugam of Meesalai South. Deceased.

Casipillai widow of Veerakatty of Meesalai South.

Petitioner.

vs.

1. Arumugam Kanapathipillai of Meesalai South.
2. Thambu Kumaraswamy and wife
3. Sethupillai both of Chavakachcheri North. Respondents.

This matter of the petition of the petitioner abovenamed praying that Letters of Administration to the estate of the deceased be issued to her coming on for disposal before S. J. C. Schokman, Esquire, District Judge of Jaffna on the 26th day of July, 1945, in the presence of Mr. I. W. A. Samuel, Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner dated respectively 11th and 12th days of July 1945, having been read:

It is ordered that the petitioner be and she is hereby appointed Administrator to the estate of the deceased abovenamed as sister and sole surviving heir of the said deceased, unless the Respondents shall appear before this Court on the 20th day of August 1945, and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

The 26th day of July 1945.

Sgd. S. J. C. SCHOKMAN,
District Judge.

Drawn by
Sgd. I. W. A. Samuel,
Proctor for Petitioner.

31—2.

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam, residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org